1973 ஏப்ரல் 5] [பேரவைத் துணைத் தலைவர்]

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1973-74-வது ஆண்டு மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் (முதலமைச்சர்) அவர்களும், பொதுக்கணக்காய்வுக் குழுவின் தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

இப்பேரவையின் 165-வது விதியின்கீழ் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(இ) 1973-74-ம் ஆண்டுக்கான (1) மதிப்பீட்டுக் குழு (2) பொதுக் கணக்காய்வுக் குழு (3) சட்டப் பேரவை சட்டவிதிகள் ஆய்வுக்குழு ஆகியவற்றுக்கான உறுப்பினர்கள் நியமனம் பற்றி மேலவைத் தலைவரது செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்திகள் வரப்பெற்றன என்பதை இப்பேரவைக்கு அறிவிக்கின்றேன் :—

1973-74-ம் ஆண்டுக்கான சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் :—

1. புலவர் ஓ. அறிவுடைநம்பி.
2. திரு. நாகூர் ஈ. எம். அனிபா.
3. திரு. பி. திருஞானசம்பந்தம்.
4. திரு. எஸ். வெள்ளபாண்டியன்.
5. திரு. கே. எஸ். அப்துல் வகாப்.

1973-74-ம் ஆண்டுக்கான பொதுக் கணக்காய்வுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் :—

1. திரு. கே. ராசாராம்.
2. திரு. எஸ். டி. ஆதித்தன்.

3. திரு. க. அறிவழகன்.
4. திரு. வி. தங்கபாண்டியன்.
5. திரு. வி. ஈஸ்வரமூர்த்தி.

1973-74-ம் நிதி ஆண்டுக்குரிய சட்டப்பேரவை சட்ட விதிகள் ஆய்வுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து உறுப்பினர்களை இம்மன்றம் நியமனம் செய்கிறது :—

1. திரு. எம். ராஜா அய்யர்.
2. திரு. ஜி. பராங்குசம்.
3. திரு. எம். சங்கரலிங்கம்.
4. திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி.
5. திரு. இல. பலராமன்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, முன்னாலே இருக்கிறவர்கள் எதிலே வேண்டுமானாலும் பேசுகிறார்கள். அவர்கள் எந்த விதியிலே பேசுகிறார்கள் என்று தெரியவில்லை. எந்த விதியின் கீழே அவர்களைப் பேச அனுமதிக்கிறீர்களோ அந்த விதியின் கீழே பின்னாலே இருக்கிற எங்களுக்கும் பேச அனுமதி கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முன்னாலே இருக்கிறவர்கள் எல்லாம் கட்சிகளின் தலைவர்கள் என்பது உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். கட்சித் தலைவர்களுக்கு மட்டுமல்ல. பேரவையில் இருக்கிற எந்த உறுப்பினரும் காரணமில்லாமல் பேசுவதைத் தடுப்பதற்கு சட்ட விதிகள்படி உரிமை எனக்கு இருக்கிறது. அந்த உரிமையை எல்லா நேரங்களிலும் நான் பயன்படுத்துவதில்லை. முன் வரிசையில் இருப்பவர்கள் கட்சிகளின் தலைவர்கள். அவர்கள் கட்சிகளின் சார்பாக இருக்கிறார்கள். நீங்கள் அவர்களைத் தலைவர்களாக ஏற்றுக் கொண்டு அவர்கள் உங்கள் கருத்துக்களைச் சொல்கிறார்கள். ஆகவே, நீங்கள் இந்தப் பிரச்னையைக் கிளப்புவது சரி என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.